திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)

Open Access & Peer Reviewed Journal

E-ISSN : 2583-0449

Manamangalam in Thinai, Thurai Continuation of Purapporul Venbaamaalai

M. Aravind

Ph.D. Scholar, Department of Tamil, Presidency College (Autonomous), Chennai, India

Manuscript ID : **MT127A0060**

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 16.09.2022
Revised: 19.09.2022
Accepted: 22.09.2022
Published: 30.09.2022

Pages : 94-98

DOI: 10.5281/zenodo.7371856

ABSTRACT:

Thinai and Thurai's development reflects socio-cultural and temporal changes. Because of this growth, the same content of Thinai and Thurai has been multiplied in one book and in different books. As a result, it is obvious that all Thinai and Thurai are continuations of any one component. This article approaches these similar attributes as a continuation of both Thinai and Thurai. This research is based on the Manamangalam Thurai that took place in Purapporul Venbaamaalai's Paadaan Padalam. The article seeks to establish Manamangalam Thurai is continuity of Makatpaar Kaanchi in Kaanchi Padalam with appropriate evidence and illustrations.

KEYWORDS:

Grammar Expansion, Makatkodai, Similarity of Thinai - Thurai

மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
தொகுதி-2 பதிப்பு-3 செப்டம்பர் 2022 | E-ISSN: 2583-0449

புறப்பொருள் வெண்பாமாலையின் திணை, துறை தொடர்ச்சியில் மணமங்கலம்

மு. அரவிந்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

திணைகளும் துறைகளும் வளர்வது சமூக - பண்பாடு, கால மாற்றத்தின் வெளிப்பாடு. இந்த வளர்ச்சின் காரணமாகவே ஒரே பொருண்மையுடைய திணைகளும் துறைகளும் ஒரே நூலிலும் வெவ்வேறு நூல்களிலும் பெருகின. அதனடிப்படையில் எல்லாத் திணை, துறைகளும் ஏதாவது ஒரு கூறின் தொடர்ச்சியே என்பது தெளிவு. இந்த ஒற்றுமைப் பண்புகளை தொடர்ச்சி என்ற நிலையில் வைத்து இக்கட்டுரை அணுகுகிறது. அந்த வகையில் புறப்பொருள் வெண்பாமாலையின் பாடாண் படலத்தில் உள்ள மணமங்கலம் என்னும் துறையை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைகிறது. இத்துறையானது காஞ்சிப் படலத்தில் வரும் மகட்பாற் காஞ்சித் துறையின் தொடர்ச்சியே என்பதனை தக்க சான்றுகளுடன் இக்கட்டுரை நிறுவ முற்படுகிறது.

கருச்சொற்கள்

இலக்கண விரிவு, மகட்கொடை, திணை - துறை ஒற்றுமை

முன்னுரை

புறப்பொருள் இலக்கண வளர்ச்சியைத் தொல்காப்பியத்திலிருந்தே மதிப்பிடுகிறோம். தொல்காப்பியத்திற்கு முன்னரே பல்வேறு இலக்கணிகள் இருந்திருந்தாலும், புறப்பொருள் ஆய்வு தொல்காப்பியத்திலிருந்தே தொடங்குகிறது. அதன் தொடர்ச்சியாகவே, அதனைப் பின்பற்றியும் அதிலிருந்து மாறுபட்டும் இலக்கணங்கள் எழுந்தன. அந்த வகையில் புறப்பொருள் குறித்துத் தோன்றிய முதல் நூல் புறப்பொருள் வெண்பாமாலை. இது புறப்பொருள் இலக்கண வளர்ச்சியில் முதன்மையானதாகக் கருதப்படுவது. அவ்வாறு தொடர்ச்சி என்பது ஒன்றிலிருந்து மற்றொன்று தொடர்ந்து வருவதாகும். நூல்கள் மட்டுமின்றி திணை, துறைகளோடும் இதனைப் பொருத்திப் பார்க்கலாம். புறப்பொருள் வெண்பாமாலையின் பாடாண் படலத்துள் அமையப்பெறுவது மணமங்கலம் என்னும் துறை. இனி இத்துறையை ஒப்பாய்வு அடிப்படையில், திணை, துறைகளோடு ஒப்பிட்டு அதன் தொடர்ச்சியை மதிப்பிடலாம்.

மணமங்கலம்

பாடாண் படலத்துள் மொத்தம் 47 துறைகள் அமைந்துள்ளன. அவற்றுள் 18 ஆம் துறையாக உள்ளது மணமங்கலம். அரசன் மகளிரோடு புணர்ந்து மகிழ்வது 'மணமங்கலம்' என்னும் துறையாகும். மணம் என்பது கூடுதல் எனவும், மங்கலம் என்பது நன்மை எனவும் பொருள் அமையும். இதன் இலக்கணத்தை ஐயனாரிதனார் பின்வருமாறு விளக்குகிறார்.

இகலடுதோ ளெறிவேன் மன்னன்
மகளிரொடு மணந்த மங்கலங் கூறின்று (பு.வெ.பாடாண்.கொளு, 22)

பகைவரைக் கொல்லும் தோளினை உடையவன் எம்வேந்தன். அவன் தன் பகைவர்மீது எறிகின்ற வேலினைத் தாங்கியவன். அவ்வேந்தன் பெண்டிரோடு கூடி இன்பமுறுவான். அச்சிறப்பினை உரைக்கிறது இக்கொளு. மன்னன் மகளிரோடு கூடி இன்புறுவான் என்று மட்டும் கொளுவானது விளக்கும் நிலையில், அதற்குரிய வெண்பாவின் விளக்கம் பொருள்விளக்கும் நிலையில் விரிவாக அமைகிறது. அதனை இங்கே காணலாம்.

அணக்கருந் தானையா னல்லியந்தார் தோய்ந்தோள்
மணக்கோல மங்கலம்யாம் பாட - வணக்கருஞ்சீர்
ஆரெயின் மன்னன் மடமக ளம்பணைத்தோட்
கூரெயிற்றுச் செவ்வாய்க் கொடி (பு.வெ.பாடாண்.வெண்பா, 22)

பகைவரால் கைக்கொள்ளுவதற்கு அரிதாகிய அரணினை உடையவன் வேந்தன். அவன் பிறருக்குத் தலைவணங்காத நல்ல புகழினைப் பெற்றவன். அவ்வேந்தனின் மடமகள் அழகிய மூங்கிலை ஒத்த தோளினையுடையவள். ஒளி வீசுகின்ற கூரியப் பற்களைப் பெற்றவள். சிவந்த வாயினைக் கொண்டவள். மேலுலகத்தில் காணப்படுகின்ற காமவல்லி என்னும் கொடியை ஒத்தவள். அவள் பகைவரால் வருந்துவதற்கு அரிய படையினை உடைய எம்மன்னன் அணிந்த அல்லி மாலையுடன் கூடினாள். அப்பெண்ணின் திருமணக் கோலத்தை யாங்கள் புகழ்ந்து பாடிக்கொண்டிருந்தோம் என இவ்வெண்பா பொருள் கூறுகிறது.

நொச்சி மன்னனும் உழிஞை மன்னனும்

இங்குப் பகைவரால் கைக்கொள்வதற்கு அரிதாகிய அரணினை உடையவன் என்றதால், இவ்வடிகள் குறிப்பது நொச்சி மன்னனையே. ஆக, இங்குக் கூறப்பெறுவது நொச்சி மன்னனும் அவனுக்கு எதிரான உழிஞை மன்னனுமாம்.

> **“இங்கு விதந்து சுட்டும் அந்த ஆண்மகன், புலவர்களையும் ஏனைய மக்களையும் புரத்தல் செய்யும் அரசுடைய அரசனோ உழிஞைத்திணையை வாகை பெற்ற புரவலன் என்க. புரவலனாம் அந்த அரசனது நாளாந்த வாழ்க்கையிற் கடைபிடிக்கும் ஒழுகலாறு நாற்பத்தெட்டுத் திறனாகக் கூறுபடுத்திச் சொல்லப்பட்டுள்ளது” (சிவபாதசுந்தரனார்,** 1991:224)

என்று குறிப்பிடுகிறார் நா. சிவபாதசுந்தரனார்.

அவ்வாறு பாடாண் திணையில் பாடப்பெறுவது வெற்றிபெற்ற உழிஞை மன்னன் என அவர் கூறுகிறார். பாடாண் திணை முழுவதும் வெற்றிப்பெற்ற உழிஞை மன்னனே பாடப்பெறுகிறான் என்று கூறியமையால் இத்துறை விளக்குவது நொச்சி மன்னனுக்கும், உழிஞை மன்னனுக்குமான போர் என்பதனை முதலில் தெளிய வேண்டும்.

மகட்பாற் காஞ்சியின் தொடர்ச்சி

மணமங்கலத்தை விளக்கும் வெண்பாவின் மையக்கருத்து யாதெனில், நொச்சி மன்னனின் மகளை, உழிஞை வேந்தன் மணந்தான் என்பதாகும். புறப்பொருள் வெண்பாமாலையின் காஞ்சிப் படலத்துள் அமையும் மகட்பாற் காஞ்சித் துறையில், மகளை மணம் செய்துத் தருக எனக் கேட்ட வஞ்சியரசனுக்கு, காஞ்சியரசன் மறுப்பது மையக்கருத்தாகும் (பு.வெ.காஞ்சி.கொளு, 24). தொல்காப்பியக் காஞ்சித் திணையுள் வரும் மகட்பாற் காஞ்சித் துறையும் இதே கருத்தையுடையதே (தொல்.பொருள்.இளம். 77:14-15).

ஆக தொல்காப்பியம் முதற்கொண்டு இதில் ஒரு ஓர்மைத்தன்மை தொடர்ந்து வருகிறது. அது, எதிரெதிர் நிலையிலிருக்கும் அரசர்களுள் ஒருவன், மற்றொரு அரசனின் மகளை மணம் செய்ய வேண்டுவதும், அதற்கு ஏனைய அரசன் மறுப்பதும் ஆகும். மணமங்கலத்திலும் இதே நிலையே காணப்பெறுகிறது. நொச்சி மன்னனின் மகளை, வெற்றிப்பெற்ற உழிஞை மன்னன் மணந்தான் என்று வெண்பா கூறுகிறது. நொச்சி மன்னன் மணம் முடிக்க மறுத்தான் எனச் செய்தி இல்லை. நிற்க;

தொடர் நிகழ்வு

நா. சிவபாதசுந்தரனார் இத்துறைக்கு விரிவான விளக்கம் தருகிறார். அவர் தும்பை, உழிஞை, நொச்சி ஆகிய மூன்று திணைகளையும் ஒப்புமைப்படுத்தி மணமங்கலத்தை விளக்குகிறார்.

> **“மணமங்கலத்தினரான ஏந்திழையாளை எனக்குத் தருகவென்று மென்னிலமாம் முல்லை சார்ந்த மருதத்து நொச்சி மதில் நிலத்தின்**

> **மன்னனை நெய்தல் நிலத்து உழிஞை கொண்ட வேந்தன் வேண்ட அந்த நொச்சியான் மறுக்கின்றான். மறுக்கவே தும்பைத் திணைதுறை மன்னவன் காலப்போக்கில் உழிஞைத் திணையனாய் உயர்ந்து படையெடுத்து அவனின் மகட்பால் இகலை வாகையாக்கினான். மதிற் குமரியை மணந்த புறத்து மன்னவன் விரைந்து அம்மதிலுக்கு உரியவனாகியதும் அகவுழிஞைப் பெண்ணாம் மடமகளை மணந்த நன்மைப்பாடும் இயையவும் இயல்கிறது" (சிவபாதசுந்தரனார்,** 1991: 253)

நா. சிவபாதசுந்தரனார் தும்பை, உழிஞை, நொச்சி ஆகிய மூன்று திணைகள் தொடர்புடைய தொடர் நிகழ்வாக இதனைக் குறிப்பிடுகிறார். தும்பையில் தொடங்கி நொச்சியில் நிறைவுபெறும் நிகழ்வான மணமங்கலம் பாடாண் திணையில் பாடுபொருளாகப் பாடப்பெற்றது என அவரது கருத்தில் விளங்குகிறது.

இந்தத் தொடர்நிகழ்வில் அவர் குறிப்பிடும் மகட்பால் இகல் (பு.வெ.உழிஞை.கொளு, 29), மண்ணுமங்கலம் (பு.வெ.உழிஞை.கொளு, 28) ஆகியன மகட்பாற் காஞ்சி மற்றும் மணமங்கலம் ஆகிய துறைகளோடு பொருண்மையளவில் பொருந்தி வருவன என்பது குறிப்பிடத்தக்கது. நொச்சிப் படலத்தில் வரும் மகள் மறுத்து மொழிதல் (பு.வெ.நொச்சி.கொளு, 9) என்னும் துறையும் மேற்கூறிய துறைகளோடு வைத்து எண்ணத்தக்கதே. இத்துறைகள் யாவும் மகட்கொடை குறித்து வருவன என்பது இவற்றுக்கிடையேயான மேலுமொரு ஒற்றுமைக் கூறு.

ஒருமைப் பன்மை மயக்கம்

> **"கொளுவில் மன்னன் மகளிரொடு என்று பன்மையாக வருதலும் வ-று மடமகள் என்று ஒருமையாக வருதலும் மயக்கத்திற் குரியதாம். கொளு பாடாணின் இணைமணத்தையும், வ-று திணைமணத்தையும் சுட்டுவதோடு வ-று உழிஞைத்திணைக் கருத்துக்கே வாய்ப்பாகவும் வருதலை ஆன்றோர் உன்னுவராக" (சிவபாதசுந்தரனார்,** 1991: 253)

நா. சிவபாதசுந்தரனார் குறிப்பிடும் தொடர் நிகழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வெண்பாவைப் போன்று கொளுவிலும் ஒருமையில் பெண் என அமைந்திருக்குமானால், மகட்பால் இகல் உள்ளிட்ட ஏனைய துறைகளோடு பொருண்மை பொருந்தி வருகிறது. தவிர, கொளுவில் பன்மையில் மகளிர் என்றும், வெண்பாவில் மடமகள் என்று பன்மையில் வருவது உள்ளபடியே மயக்கம் தருகிறது.

இந்த ஒருமைப் பன்மை மயக்கம் பாடபேதம் காரணமாக நிகழ்ந்ததாக இருக்கலாம். கொளு ஒருமை நிலையில் அமைந்தால் மயக்கமின்றி, கொளுவும்

வெண்பாவும் திணை மணத்தை சுட்டுகின்றன. மேலும் மகட்பாற் காஞ்சி உள்ளிட்ட ஏனைய துறைகளோடு பொருண்மையளவில் பொருந்துகிறது.

இனி மேற்கண்ட செய்திகளை ஆராயும்போது, நொச்சி மன்னன் மகளை உழிஞை வேந்தன் மணந்தான் என்ற வெண்பாவின் மையக்கருத்தின் வழியும், மகட்பால் இகல் உள்ளிட்டத் துறைகளின் தொடர் நிகழ்வாக நா. சிவபாதசுந்தரனார் குறிப்பிடுவதன் வாயிலாகவும், மணமங்கலமானது மகட்பாற் காஞ்சித் துறையின் தொடர்ச்சி என்ற முடிவுக்கு வரமுடிகிறது. இந்த தொடர்ச்சி தொல்காப்பியம் தொடங்கி வளர்ந்து வருகிறது.

முடிவுரை

தொல்காப்பியர் கூறும் ஏழ் திணை பகுப்பிலிருந்து விலகி பன்னிரண்டு திணையாக விரிவாக்கியதே புறப்பொருள் வெண்பாமாலையின் திணை, துறை வளர்ச்சியையும் தொடர்ச்சியையும் விளங்கிக்கொள்வதற்குச் சான்றாகும். கரந்தைத் திணை வெட்சியின் தொடர்ச்சியாக அமைவதைப் போன்று, தும்பை, உழிஞை, நொச்சி மற்றும் பாடாண் ஆகியன தொடர் திணைகள் என விளக்கப்பெற்றுள்ளன. துறைகளின் ஒற்றுமையைக் கொண்டு மகட்பாற் காஞ்சியின் தொடர்ச்சியே மகள் மறுத்து மொழிதல், மண்ணுமங்கலம், மகட்பால் இகல் மற்றும் மணமங்கலம் என நிறுவப்பெற்றுள்ளது.

துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணர் (உ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969.
2. சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.), புறப்பொருள் வெண்பாமாலை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, 2018.
3. சிவபாதசுந்தரனார், நா., புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி (இரண்டாம் பகுதி), வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம், இலங்கை, 1991.

REFERENCES

1. Ilampooranar, Tholkaappiyam - Porulathikaaram, The South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai, 1969.
2. Sivapathasundaranar, N., Purapporul Venbaamaalai Aaraaichi (Vol. 2), Vaddukoddai Electorate Thamizh Sangam, Sri Lanka, 1991.
3. Swaminatha Iyer, U.V. (Ed.), Purapporul Venbaamaalai, Dr. U.Ve. Swaminatha Iyer Library, Chennai, 2018.